# சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் - சுற்றுச் சூழல் கல்வியின் நோக்கம்

**ஏ.எல்.எம். றியால்**
Department of Social Sciences
South Eastern University of Sri Lanka
amohamedriyal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் தொழில் உற்பத்தியானது உச்ச நிலையை அடைந்துள்ளது. இதன் பேறாக உலக சுற்று சூழல் நெருக்கடி தீவிரமாக மோசமடைந்ததுள்ளது. இந்த சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு அரசாங்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புக்கள் வல்லுனர்கள் தொழிநுட்ப பணியாளர்கள் இது தொடர்பான ஆய்வுகளை வலியுறுத்தினர். இந்த அவசர தேவையை பூர்த்தி செய்ய நிபுணர்கள் அதிகாரிகளின் வேண்டுதலை நாடி நின்றனர். எனினும் சில நாடுகளின் சமூக பிரிவினருக்கிடையிலான நடத்தையில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் சூழல் நடத்தை தொடர்பாக ஒரு சரியான புரிதல் இருக்க வேண்டும், அத்துடன் சுற்றுச்சூழல் நிபுணர்களால் இவற்றைத் தீர்க்க முடியுமாகயிருந்தால் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் திறம்பட தீர்க்க முடியும் அவ்வாறு இல்லாதவரை அவற்றைத் தீர்க்க முடியாது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியலின் முக்கியத்துவம் சமீபத்திய காலங்களாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டுவரும் விரும்பத் தகாத மாற்றங்களும், அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும், இது தொடர்பாக நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. உலக சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம், உலகம் தழுவிய அளவில் சூழலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுவதுமாகும். சூழல் தொடர்பான விடயங்களில், மக்களுடைய மனப்போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டிய பொறுப்பு சமுதாயங்களுக்கு உண்டு என்ற புரிந்துணர்வை உருவாக்குதல், பாதுகாப்பானதும், வளமுள்ளதுமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்காகக் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெறுகிறது. இவ்வாய்வினைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு விபரண முறையியல் பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்குரிய தரவுகளாக, சுற்றுச் சூழல் ஒழுக்கவியலை அறிய உதவும் மூல நூல்கள், சுற்றுச்சூழல் பிரகடனங்கள், சுற்றுச் சூழல் ஒழுக்கம் தொடர்பில் விவாதிக்கும் ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் என்பனவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

***பிரதான சொற்பதங்கள்:*** *சுற்றுச் சூழல், ஒழுக்கம், கல்வி, சமூகம், இயற்கை*

## 1. ஆய்வு அறிமுகம்

மனித நடத்தை தொடர்பில் நல்லது - கெட்டது, சரி - பிழை, நல்லொழுக்கம் - தீயொழுக்கம், நீதி - குற்றம் ஆகிய கருத்துருக்களை முறைப்படுத்தி, பேணி, அவற்றைக் கைக்கொள்ளும்படி மக்களுக்குப் பரிந்துரை செய்ய அக்கறை கொண்டுள்ள ஒரு துறையாக ஒழுக்கவியலை வரையறுக்க முடியும். இது மனித நடவடிக்கையின் தராதரங்களையும், இயற்கையின் இறுதி மதிப்பு மற்றும்

நடைமுறையைக் கொண்டு முடிவு எடுத்தல் போன்ற பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்கிறது.

சுற்றுசூழல் என்ற சொல்லை சமூக பொருளாதார சூழல் என்ற சொற் பதங்களுடன் ஒப்பிட்டு வேறுபாடு காணலாம். பல சமயங்களில் சூழல் என்ற சொல் இயற்கைச் சுற்றுசூழலையே சுட்டி நிற்கும். நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்றப் பொருள்களின் தொகுப்பே சுற்றுச்சூழலாகும். பெருகி வரும் விஞ்ஞான வளர்ச்சியால் விளைந்த நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து பார்த்தால் நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே விஞ்சி நிற்கின்றன (Low, N. 1999).

சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் சூழலில் சார்பைக் கொண்டுள்ள பிரயேக ஒழுக்கவியலின் கீழ்வரும் ஒரு பிரிவாகும். இது பாரம்பரிய ஒழுக்கவியல் எல்லைகளை விரிவாக்கிறது. மனிதனானவன் மனிதன் அல்லாதவற்றினுடன் கொண்டுள்ள நடைமுறைகள் மீது கவனம் செலுத்துகின்றது. இன்றைய தலைமுறைக்கான மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஆராய்ச்சிக்குரிய அம்சமாக இன்று பிரபல்யமடைந்துள்ளது (William Cronon,1995:69). இந்த ஆய்வு இரண்டு பரந்த துறைகளில் அதாவது சுற்றுச்சூழல் மற்றும் ஒழுக்கவியல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். அது மக்கள் மற்றும் சூழல் என்பவற்றிற்கிடையேயான தொடர்பு என்னென்ன வழிகளில் இடம்பெறுகின்றது என்பதில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக மனித நடவடிக்கைகள் சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கங்கள், அதனைப் புரிந்தது கொள்வதிலுள்ள முக்கியத்துவம், அவற்றை புரிந்து கொள்ளும் வழிகள் ஆகியவற்றைச் வெளிப்படுத்தும்.

கல்வியின் நோக்கம் மனித சிந்தனை, நடத்தை போன்றவற்றை மாற்றியமைப்பதாகும். எனவே சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தீர்க்க சுற்றுச்சூழல் கல்வியின் நியமங்களை அறிந்தால் தான் சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முடியுமென எதிர்பார்க்கப்பட்டது. 1972ம் ஆண்டு ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் ஐ.நா.சபையின் சார்பில் நடைபெற்ற மனித சுற்றுச்சூழல் மாநாட்டில் வெளியிடப்பட்ட ''மனித சுற்றுச்சூழல் குறித்த ஸ்டாக்ஹோம் பிரகடனம்'' சூழல் குறித்த புதிய கவனங்களையும், அக்கறைகளையும் உலகில் ஏற்படுத்தியது. இதில் மனித சுற்றுச்சூழல் குறித்து ஐக்கிய நாடுகள் சர்வதேச சுற்றுச்சூழல் நிகழ்ச்சி திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு வளர்முக நாடுகள் முன்வர வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. பின்னர் 1974 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் உத்தியோக பூர்வமாக சர்வதேச சுற்றுச்சூழல் கல்வித்திட்டத்தை ஊக்குவித்தது உலக நாடுகள் இவற்றை பின்பற்ற வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது (Stevenson, R. B. 2007).

1977 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ட்பைலீஸீ (Tbilisi (USSR). 74 - 26 October 1977), சுற்றுச்சூழல் கல்வி குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மாநாடு நடைபெற்றது. அதில் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் அதன் தேவைகளை மேம்படுத்தவும் அந்தச் சுற்றுச்சூழல் கல்வி வளர்ச்சி பற்றிய அறிவை பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் அந்தச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற குறிக்கோள் அம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. மனப்பாங்கு, அர்ப்பணிப்பு மற்றும் திறன்கள் கொண்டவையாக ஒரு தீர்மானம் வேண்டும். அந்தச் சுற்றுச்சூழல் கல்வித்திட்டங்கள் வளர்ச்சியில் ஒழுக்க பெறுமானங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். கல்வியின் நோக்கத்திற்காக விழிப்புணர்வு மற்றும் மதிப்புக்கள் அதனூடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் (Sessions, G. 1995).

19ம் நூற்றாண்டிலும், இதற்குப் பிறகு நடந்த உலகப் போர்கள், தொழிற்புரட்சி, பொருளாதாரத்திலும் இதன் வளர்ச்சியிலும் ஏற்பட்ட பின்னடைவுகள் போன்ற நிகழ்வுகள், உலக நாடுகளை மிகவும் பாதிப்படையச் செய்தது. இதனால் அவர்கள் அனைவரும் இயற்கை வளங்கள் ஒன்றையும் விடாமல் சுரண்டினர். இதன் பாதிப்புகள் நம்மை நெருக்கடிக்குள்ளாகி உள்ளன. தற்போது அமில மழை, பாலைவனமாதல், உலக வெப்பநிலை மாறுபாடு, ஓசோன் படலம் பாதிப்பு, கதிரியக்கம், உயிர்களின் அழிவு போன்றவை மனிதர்களுக்குப் பெரும் சோதனையாகிவிட்டன. மேற்சொன்ன நிலையை மாற்றவும், ஆய்வுகள் நடத்தி தீர்வு காணவும் 1991 இல் சர்வதேச சுற்றுச்சூழல் கல்வி தகவல் தொடர்பு சாதனங்களினூடாக வெளியிடப்பட்டது" (A Universal Environmental Ethic-The Ultimate Goal of Environmental Education). இக்கல்வியின் இறுதி இலக்கு உலகளாவிய சுற்றுச்சூழல் ஒழுக்க நெறிகள் என்ற வடிவத்தில் இருந்தது. நெறிமுறைகளின் முக்கியத்துவத்தை பற்றிய விவாதத்திற்கு அந்த அறிக்கையில் நாகரீகமடைந்த பண்பட்ட மனித நம்பிக்கையுடன் பயிற்சி நெறிமுறைகள் என்பன கல்வியின் இறுதி இலக்கை வலியுறுத்தின. அவர்களின் சரியான அணுகுமுறைகள் மற்றும் சூழல் மதிப்புக்களினுடாக நடத்தை மற்றும் இலட்சியத்தை அடையலாம் என நம்பப்பட்டது.

## ஆய்வின் நோக்கம்

சுற்றுச் சூழலியல் ஒழுக்கவியல் என்பது அறிவியலில் அண்மையில் மலர்ந்து வரும் ஒரு புதிய துறை. இது பல அறிவியல் துறைகளும் கலந்த தனிப்பெரும் துறையாக இந்நாளில் இன்றியமையாததாய் விளங்குகின்றது. சூழல் மனிதனைச் சூழ்ந்துள்ளது. அனைத்தும் இதில் உள்ளடங்குகின்றன. இவ்வாறான, ''புறச்சூழ்நிலையை உயிரின் வெளிப்புறக் கூடு என்று விளக்குவதும்'' பொருத்தமாகின்றது. ஆதலால் சுற்றுச் சூழல் ஒழுக்கவியல் என்பது, ''சமூகம் - இயற்கை என்ற உறவு அடிப்படையில் திகழ்வதைத் வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வு தொடர்பான விவாதங்கள்

சுற்றுச் சூழலியல் ஒழுக்கவியல் மனிதர்கள் இயற்கை சுற்றுச்சூழல் இடையே ஒழுக்கவியலுடன் தொடர்புடையதாகவுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. ஒழுக்க கட்டுப்பாடு இயற்கையும் மனிதனையும் சார்ந்தது என்று கூற முடியும். ஒழுக்க மதிப்புகள் நம்பிக்கை உள்ளிட்ட விடயங்களுக்கு ஒரு உந்துதலை கொடுக்கின்றது. சுற்றுச் சூழல் ஒழுக்கவியல் ஒரு புதிய அறிவியலாகும். இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டா? என்பது ஐயத்துக்குரியது. ஆனால் அது உண்மையில் இரண்டாம் உலக போருக்கு பின்னர் தான் எழுச்சிபெற்றதாகும்.

மெய்யியலளர்கள் பாரம்பரிய ஒழுக்க பிரச்சினைகளுடன் சுற்றுச் சூழல் நெருக்கடியை பற்றி யோசிக்கத் தொடங்கினர். அவர்கள் பெரும்பாலும் இரண்டு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். முதலாவது, இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்பு எவ்வாறானது? இவற்றிற்கிடையே ஒரு பொருத்தமான தொடர்பு உள்ளதா? இரண்டாவது, இந்த உறவு எவ்வாறான மெய்யியல் அடிப்படையில் உள்ளது? இந்த கேள்விகளுக்கான பதில்கள் பாரம்பரிய ஒழுக்கவியலாளர்கள் தெரிவிக்கின்றனர் (Low, N. 1999). தொன்மைக்கால மனிதன் ஒரு ஆணவத் தன்மை கொண்டவனாக இருந்தான். அவன் அனைத்து விடயங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் அதில் திறமையானவனாகவும் இருந்தான். தொன்மையான இலக்கியங்களில் இந்த நம்பிக்கையை கண்டு கொள்ளலாம். அதிகாரம் செலுத்தல் என்ற விடயமும் மனித

இயல்பில் உள்ளது. அனைத்தும் மனிதர்களுக்கு என்ற தன்மையில் இருந்தது. மனித இனத்திற்கு இயற்கையை பயன்படுத்த உரிமை உண்டு. எல்லாம் முடிந்தவரை மாறுகின்றது. மனித இயல்பை தாண்டியும் மெய்யியல் கருத்துக்கள் முழுமை பெற்றிருந்தது. இலக்கியம், சமயம், கலாச்சாரம் மற்றும் சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் மற்றும் மேற்கத்திய தொழில் துறை, தொழில் நுட்பம் சமூகம் போன்றவற்றில் இது முன்னுதாரணமாக இருந்தது. இயற்கைக்கும் மனிதர்களுக்குமிடையே ஒழுக்கதன்மை இல்லாத காரணத்தால் மனிதர்கள் ஒழுக்க நெறிதன்மையை அல்லது அக்கறையை அனைத்து வழிகேடாக முறைகளுக்கும் பயன்படுத்தியதனால் முரண்பட்டது. இதன்பேறாக சுற்றுச் சூழல் ஒழுக்கவியலின் தேவை முன்மொழியப்பட்டது.

பண்டைய மனித இனத்தின் தோற்றம் கிரேக்க மெய்யியலாளரான புரோட்டகரஸ் ( Protagoras , 481 411 B. C) மனிதனே எல்லாவற்றையும் அளக்கும் அளவுகோள் ( Man is the Measure of All Things) என்றார். இடைக்கால மெய்யியல் மற்Wk; ,iwapayhsuhd mf;Fitdh]; (S. T. Aquinas 1225–1274) அறிவு பூர்வமாக எல்லாவற்றிலும் நேர்த்தியான முடிவெடுக்க முடியுமென நினைத்தார். இதனால் மனிதர்கள் பூமியின் புத்தி ஜீவி என்றார். எனவே தான் கடவுள் பூமியில் யாவற்றையும் படைத்தான். மக்கள் இயற்கையின் உரிமையாளர்களாவும் எஜமானர்களாகவும் இருக்கின்றனான் (Engel,J.R.&J.G.Engel,1993). ரெனே டேக்கார்ட் (Rene Descartes 1596-1650) மனிதன் இயற்கையின் ஒவ்வொன்றினதும் உரிமையாளர்களாகவும் தொன்மையானவர்களாகவும் உள்ளான் என பிரகடனம் செய்தார். தென்மை என்பது கிரேக்கம், பகுத்தறிவு, கிறிஸ்தவம் போன்றவற்றிலிருந்து பெறப்படுகின்றது. இந்த விடயம் மேற்கத்தைய சமூகத்தில் ஒரு உலக கண்ணோட்டமாக மாறிவிட்டது. பண்டைய கிரேக்க சிந்தனை அடிப்படையில் அறிவார்ந்த எண்ணங்கள் மனித சிந்தனையின் அடிப்படையாக உள்ளது. இயற்கையில் இருந்து மனிதன் தப்பித்துக் கொள்ள முடியாது. ஸ்டோய்ட் வாதம் ( Storcism) தாவரங்கள் மற்றும் விலங்குகளை முதன்மைப்படுத்தப்படுகின்றது. விலங்குகளின் பட்டியலில் மனித இருப்பு முக்கியமானது. மனிதர்கள் அனைத்து இருப்புக்கும் ஆதாரமாக இருக்கிறார்கள். மதிப்பின் கருவியாக மனித தன்மை விளங்குகின்றது. மனிதன் உள்ளார்ந்த மதிப்பை நம்புகின்றான். அதை அனைத்துக்கும் ஆதாரமாக கருதுகின்றான். மனிதனது தேவைகள் மற்றும் நலன்களை இயற்கை பூர்த்தி செய்ய முடியும் என்பதால் மதிப்பானது முக்கியமானது.

மனித குலத்திற்கு உயர் மனித தராதரங்கள் உண்டு. இதனால் மனிதன் ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபடுவதற்கு மனிதசிந்தனையையும் மொழித் திறனையும் சான்றாக கூறலாம். விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அது பற்றிய மனோநிலை இல்லாதபடியால் இயந்திரத்தின் ஒரு பாகமாகவே மனிதன் கருதப்படுவான். மனிதன் மற்றும் ஏனைய இனங்களுக்கும் ஒரு ஒருமித்த உறவு நெறி இல்லை. இமானுவேல் காண்ட (Immanuel Kant 1724–1804) ஒழுக்க வரலாற்றில் மிக முக்கியமானவராக கருதப்படுகின்றார். விலங்குகளின் பொறுப்புக்கள் கடமைகள் (Duties to Animals) பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பகுத்தறிவுடன் மனிதர்கள் ஒழுக்க கலையில் ஆர்வம் கொள்ள வேண்டும். விலங்குகள் ஒரு அறிவார்ந்த விலங்கு அல்ல. என்றாலும் எல்லா உயிரினங்களுக்கும் பகுத்தறிவு நோக்கு வேண்டும். இது ஒரு பொதுவான நோக்கம். அறிவார்ந்த உலகம் இந்த நோக்கத்தை அடைய வேண்டும் என காண்ட நம்பினார். மேற்கத்தேய வரலாற்றாசிரியர்கள் சுற்றுச் சூழல் நெருக்கடி வரலாற்றுத் தளங்களை நோக்கினர்.

மனிதனையும் இயற்கையையும் பிரிக்கின்ற கோட்பாடுகளை கூறுவில்லை. மனித இயல்பு நம்பிக்கைக்கு அப்பால் இந்த சுற்றுச் சூழல் நெருக்கடிக்கு இயற்கையை எவ்வாறு பயன்படுத்தலாம் என மேற்கத்தைய ஆய்வாளர்கள் முக்கியமான அவதானத்தைத செலுத்தினர்.

தற்போதைய தொழில் நுட்பத் தயாரிப்புக்களை சுற்றுச் சூழல் பேரழிவுகளை தவிர்க்க பயன்படுத்தலாமா? என்பது சந்தேகத்துக்குரியது. ஆனால் இது மனித மனப்பான்மையில் உள்ளது. இந்த லட்சியம் மனித இயல்புகளுக்கு அப்பால் உள்ளது. இந்த இயல்புக்கு முரணாக மற்றும் பயன்பாடு போன்றன இயற்கை அணுகு முறைக்கு முரணாக உள்ளது. எனவே அறிவியல் மற்றும் தொழில் நுட்பப்பயன்பாடு சுற்றுக் சூழல் நெருக்கடிக்கு உதவியாக இருக்க வேண்டும்.

இயற்கை உரிமைகள், ஒழுக்கம் நம்பிக்கையின் வளர்ச்சியினை மேம்படுத்தும் தங்களுடைய இருப்பினை ஒரு இயற்கை உரிமை உண்டு என வாதிட்டனர். இந்த உரிமைகள் மன்னர்களின் விருப்பத்தை சுயாதினமாக்கியது. அவர்களுக்கு சிறைத்தண்டனை அல்லது வெளிநாட்டுக்கு நாடு கடத்தாமை. அங்கீகரிக்கப்படாத சொத்து வரி அதிகரிப்பு மற்றும் நிலத்தை பறிமுதல் செய்யும் உரிமையை குறைத்தல் போன்றவற்றில் தொடர்புடையதாக இருந்தது. காலப்போக்கில் ஐரோப்பிய சமூகத்தில் இயற்கை உரிமைகள், சுதந்திரம் போன்ற நம்பிக்கை அவைகளை தூண்டியது. இது பிரெஞ்சு புரட்சி மற்றும் அமெரிக்காப் புரட்சியின் வெற்றிக்கு வழிவகுத்தது. அதே நேரம் ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவில் உயர் மனிதாபிமான சமூகம் விழித்துக் கொண்டது. மனிதநலவாதம் (Humanitarianism)இ பயன்வழிவாதம் (Utilitarianism), விலங்கு விடுதலை இயக்கம் (Animal Liberation Movement) போன்றன வியாபிக்க தொடங்கியது. இந்த கோரிக்கைகள் ஒழுக்க நடத்தை வேறுபாடுகளை கட்டுப்படுத்தியது. இதை மேம்படுத்தும் திட்டங்களும் இணைக்கப்பட்டது. மனித வாழ்வையும் ஒழுக்க நெறிகளையும் மனித அல்லாத உயிரினம் குறிப்பாக விலங்குகளுக்கு சட்டபூர்வமான உரிமைகள் வழங்கப்பட்டது.

பிரித்தானிய அறிஞர் நைக்சென் (Edward B. Nicholson 1849-1912) விலங்குகளுக்கு பகுத்தறிவு திறன் இல்லை என பதிலாளித்தார். மற்றும் அவை வாழும் உரிமையை இழந்துவிடும் என்றார். மனிதர்களுடன் ஒப்பிடுகையில் விலங்குகளின் மனநிலை பலவீனமாக உள்ளது. அதன் உணர்வுகளும் மந்தமாகவே உள்ளது. அவை சுதந்திரம் மற்றும் வாழ்வதற்கான உரிமையை வழங்க வேண்டும். முட்டாள் போல் உள்ளவாகளால் தான் அவர்களுக்கு சுதந்திரம் மற்றும் வாழும் உரிமையை மறுக்க முடியும். நாம் விலங்குகளின் இயற்கை உரிமையை மறுக்கும் போக்குடன் பயன்படுத்த முடியாது. விலங்குகளுக்கு மனிதர்களைப்போல் ஒரு நரம்பு மண்டலம் உண்டு என அவர் உறுதியாக நம்பினார். அவைகளால் வலி மற்றும் மகிழ்ச்சியை உணர முடியும் எனவே மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் வாழும் உரிமையும் மற்றும் சுந்திரமும் அவசியமாகும்.

Salt, Henry S., (1851-1939) 1894ல் வெளியிடப்பட்ட அவரது புகழ்பெற்ற Animals' Rights Considered In Relation To Social Progress விலங்குகளின் உரிமைகள் உரிய முன்னேற்றத்தின் தொடர்புபடுத்தல் மனிதரிடம் வாழும் உரிமையும், சுதந்திரம் உண்டு எனவும், இதே தன்மை விலங்குகளுக்கும் வேண்டும், மனித ஒழுக்கங்கள் விரிவாக்கப்பட வேண்டும். விலங்குகள் பயனாளிகளாக மாறிவிட்டது. நாம் விலங்குகளுக்கு கருணை, நீதி, உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் மனித குலத்தில் எமது நாகரீகம் அதன் முன்னேற்றத்தோடு தொடர்புபடுத்தப்பட வேண்டும். (Tester, Keith,1991.p. 61).

1862 இல் சவுதிஅரேபியா அடிமைமுறைமையை ஒழித்த பின்னர் அது அமெரிக்காவுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. கருப்பினத்தவர்களும் நியாயமாக மதிக்கப்பட்டு வழி நடத்தப்பட்டனர். அடுத்த கட்டமாக விலங்குகளின் விடுதலை அமுல்படுத்தப்பட்டது. இந்த இரண்டு விடுதலையும் பிரிக்க முடியாதவை. நன்கு அபிவிருத்தியடைந்த மனித குலம் மற்றும் ஜனநாயக சமூகத்தில் மனிதன் அல்லாத ஏனைய உயிரினங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். மனிதன் அல்லாத ஏனைய உயிரினங்கள் சமூதாயமற்ற விதத்தில் நாகரீகமற்ற சமூகத்தில் நடாத்தப்படுகின்றது. இது ஒரு நியாயம். சமூக அமைப்பை எடுத்துக்காட்டுகின்றன. வர்த்தக தாபனங்கள் மனித பணியான சிக்கலான இலக்காக உள்ளது சராசரியாக நபர்களை குறைக்கும் வகையில் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இங்கு விலங்குகளின் உரிமைக்கு குறிப்பிடத் தேவையில்லை. அவர்கள் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை அனுபவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. மனிதாபிமானத்துடன் கல்வி நடத்தை வழங்கப்பட பொதுவாக விஞ்ஞானிகள், சமய வாதிகள், எழுத்தாளர்கள் மனித நடத்தையின் நுட்பங்களை மனிதாபிமானத்துடன் கற்றுக் கொள்ள வேண்டும். சமூகத்தின் ஒழுக்க நெறிகள் மாறிக் கொண்டிருந்தால் சட்ட ரீதியாக சமூகத்தின் போக்கை மாற்ற வேண்டும் (Milbrath L. W. 1984).

பயன்வழிவாதியான ஜெரமிபெந்தம் (Jeremy Bentham 1747-1832) மனமகிழ்ச்சி தான் சிறந்தது என்றார். அதாவது மகிழ்ச்சி தான் நல்லது வலி தீயதாகும் என்றார். அதிகமானவர்களுக்கு அதிக மகிழ்ச்சி என்ற கோட்பாடுகளையும் அவரது ஒழுக்கக் கோட்பாடாகும். அதிகமான மக்கள் அதிகமான சந்தோசத்தை பெறல், தனிநபர் ஒழுக்கம் அல்லது சமூக ஒழுக்கம் துன்பத்தை குறைத்து மனமகிழ்ச்சியை அதிகப்படுத்த வேண்டும். கால்நடை மற்றும் குதிரைகளுக்கும் சேவை செய்ய வேண்டும் அவைகளின் உணர்ச்சி விலங்குகள் உள்ளன. இவைகளில் மனித கொடுமையை நிறுத்த வேண்டும். பகுத்தறிவு திறனை வைத்து அல்லது ஒழுக்க ரீதியாகவோ மனிதனையும் ஏனைய விலங்குகளை பிரித்து நோக்குவதை பெந்தம் கடுமையாக எதிர்த்தார். அவைகளுக்கு பகுத்தறிவு இல்லை என்பது அவர்களின் பிரச்சினையா? அவர்களால் பேச முடியாது ஆனால் அவை பாதிக்கப்படுகின்றன அல்லவா? அவர் கூறினார்.

பெந்தமின் பயன் நலவாதத்தின் படி மிகவும் நியாயமற்ற நடத்தை காரணமாக மிகப் பெரிய வலி ஏற்படும். பெந்தம் கூட டேகாட்டின் கோட்பாட்டை எதிர்த்தார். விலங்குகள் ஒரு இயந்திரத்தை போன்று உணரும் என்று நான் நினைக்கவில்லை. மனிதன் ஏன் விலங்குகளுக்கு ஒரு சட்டப்பாதுகாப்பு கொடுக்க முன்வரவில்லை. என்பது தெரியவில்லையென்றார். மேலும் விலங்குகள் மனிதர்களுக்கு நன்மையளிக்கின்றார் எனவே அவைகளுக்கு ஒரு ஒழுக்க பெறுமானத்தை கொடுக்க முன்வரவேண்டும் (Kelly,P.J.1990:p. 81).

ஜோன் லோரன்ஸ் (John Lawrence1753 – 1839) பயன் வழிவாதத்தில் நோக்கில் தான் ஒழுக்கவியல் பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும் என்றார். அவர் விலங்குகளின் ஒழுக்கம் போதிக்கப்பட வேண்டும் என நம்பினார். குறிப்பாக மனித உழைப்புக்காக பயன்படுத்தப்படவேண்டும். 1796 வெளியிட்ட குதிகள் மற்றும் பாலூட்டிகள் மீதான மனிதனின் ஒழுக்க பொறுப்பு (A Philosophical and Practical Treatise on Horses, and on the Moral Duties of Man Towards the Brute Creation) எனும் கட்டுரையில் பாலூட்டிகளுக்கு ஒரு தார்மீக நிலை அல்லது ஒழுக்க நிலை கொடுக்கப்பட வேண்டுமென ஒரு அழைப்பு விடுத்தார். தனது கட்டுரையில் இயற்கை சட்டம் கோட்பாட்டின் படி, ஒழுக்கவியலானது ஒவ்வொரு உயிரினமும் நன்றாகவே இருக்க வேண்டும், என நினைத்து எல்லா உயிரினங்களும் ஒரு அந்தஸ்தினை அடிப்படையாக கொண்டது என்ற கருத்தை முன்வைத்தார். அரிஸ்டோட்டின் ஒழுக்க

நெறிமுறையானது, மனிதனது ஒழுக்க நெறி நிலை விலங்குகளைவிட அதிகமானது என்று கூறுகின்றது. விலங்குகள் தாவரங்களை விட மேலானது. ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு நல்ல நிலைமையாக கொண்டுள்ளது. எனவே இவைகள் மனித நலன்கள் மற்றும் பயன்பாடுகள் போன்றவற்றிலிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும். சுற்றுப்புற சூழல் பற்றிய இரண்டு அம்சங்களை முதலில் மனதில் கொள்ள வேண்டும். இதில் ஏற்படும் மாற்றங்கள் இருவகைப்படும்.

1.இயற்கையின் உயிரியல், பௌதீகவியல் விதிகளின்படி ஏற்படுகிற மாற்றங்கள்.

2.மனித சமூகத்தின் செயலால் ஏற்படும் மாற்றங்கள்.

இயற்கை விதிப்படி ஏற்படுகிற மாற்றங்களைத் தவிர மற்றவைகளை ஒழுங்குப்படுத்தும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு. இன்று சுற்றுப்புற சூழல் பற்றி இரண்டு விதமான பார்வைகள் மோதுகின்றன. மனிதன் அறிவியல் தொழில் நுட்பத்தால் இயற்கையை கெடுக்கிறான். இயற்கையை மாற்றுகிற எந்த நடவடிக்கையிலும் மனித சமூகம் ஈடுபடக் கூடாது என ஒரு சாரார் கூறுகின்றனர்.. இவர்களை சுற்றுப்புறச் சூழல்வாதிகள் என அழைப்பர். இன்னொரு சாரார் இது தவறு, மானுட அறிவியல் வளர்ச்சியால் தான் இயற்கையை பாதுகாக்க முடியும், புதிய புதிய தொழில்நுட்பங்களால் மட்டுமே மானுடமும், இயற்கையும் அழியாமல் பாதுகாத்திட முடியும். (William Cronon> ed. 1995)

சமீப கால ஆய்வுகளின்படி வானிலையும், தட்பவெப்ப நிலையும் மனித இனத்தில் மிக பெரும் அளவில் செல்வாகு செலுத்தும் சுற்று சூழலை தீர்மானிக்கும் முக்கிய சுற்று சூழல் காரணிகளாகும். சுருக்கமாக, நிலம், மண், நீர், தாவரங்கள் மற்றும் விலங்களுடன் தொடர்புள்ள இயற்கையான சுற்று சூழலை இவைகள் தீர்மானிக்கின்றன. சுற்று சூழலின் இயற்கை நிலையை வாழ்வாதார வழக்கங்காளுக்கான அடித்தளத்தை உருவாக்குகிறது. இவை வெவ்வேறு சமூக குழுக்கள் மற்றும் அறிவு முறையின் தோற்றத்திற்கு இட்டு செல்கின்றன. இவை ஒன்றாக சமூகத்திற்கு உருவம் அளிக்கிறது. பண்பாட்டு முறையை உருவாக்குகிறது. வாழ்க்கை முறையை வளர்க்கிறது. இவ்வாழ்க்கை முறையானது குறைந்த அளவில் ஆற்றலையும் பொருளையும் சார்ந்திருக்கும் போது, சுற்று சூழலின் மீது அதன் தாக்கம் குறைவானது. ஆகவே வானிலை மற்றும் தட்பவெப்ப நிலைமீது மனிதனின் நடவடிக்கைகைகளின் அழுத்தமும் குறைவானது, மாறாக அதிக ஆற்றலையும், பொருளையும் சார்ந்திருக்கும் போது, சுற்று சூழலின் மீது அதன் எதிர்மறை தாக்குதல் அதிகமாகும்.

சுற்றுச்சூழல் சட்டங்கள், ஒழுக்கமுறைகள் மற்றும் கல்வி ஆகிய மூன்றும் பின்னிப்பிணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு வழிவகுக்கின்றன. இந்த காரணிகளின் ஒவ்வொன்றும், தேசிய சுற்றுச்சூழல் முடிவுகள் மற்றும் தனிப்பட்ட சுற்றுச்சூழல் நடத்தைகளையும் பாதிக்கின்றன. உண்மையான சுற்றுசுழல் பாதுகாப்புக்கிடைக்க சமுதாயம் ஒன்றுபட்டு சுற்றுசூழலை பற்றிய முடிவுகளை எடுப்பது அவசியமாகின்றது (Stevenson,R.B.2007). சூழலியல் என்பது தங்கள் சுற்றுப்புறத்தோடு உயிரினங்களுக்கு உள்ள உறவு பற்றிய ஆய்வு மட்டும்தானா? அதுமட்டுமன்று. சூழலியல் உயிரியலின் ஒரு பிரிவனை மட்டும் விளங்கவில்லை. இது இயற்கை, அறிவியல், சமூக அறிவியல், தத்துவ இயல் ஆகியவற்னற இணைத்து இயற்கையை முழுமையாகப் புரிந்து கொள்ள முனனகிறது. எல்லா உயிர்களும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மைதான் சூழலியலின் அடிப்படையாகும்” ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சுற்றுச்சூழல் விதிமுறைகள், அடிப்படைகள், அமைப்புகளை பற்றி கல்வியின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்துதலே சுற்றுச்சூழல் கல்வி ஆகும். இதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் சுற்றுச்சூழலை

மேம்படுத்துவதிலும் மற்றும் அதற்கு தேவையான பாதுகாப்பான முடிவுகளை முறைகள் கையாளுவதிலும் தனி கவனம் ஏற்படும் வகையில் இக்கல்வி உதவி புரிகிறது.

**ஆய்வு முடிவுரை:**

சமூக மேம்பாட்டிற்கு இயற்கையை காப்பதன் அவசியம் உணர்த்தப்பட்டள்ளது. மாசற்ற உலகம் படைப்பதன் மூலம் ஆரோக்கியமான மனித சமூகம் அமையும் எனக் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. உலகம் தோற்றிய காலம் தொட்டு இயற்கை தன் இயல்பில் திகழ்ந்து கொண்டு இருக்கிறது. அந்த இயற்கைச் சிக்கல் ஏற்படுவது மனித சமூகத்திற்கு தீங்கானது. உண்மையான சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் அறிவு, சுற்றுசுழல் பாதுகாப்புக்கிடைக்க சமுதாயம் ஒன்றுபட்டு சுற்றுச்சூழலை பற்றிய முடிவுகளை எடுப்பது அவசியமாகின்றது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியலும் கல்வியும் ஐயமின்றி யாவரும் முன்னெடுத்துச் செல்லவேண்டிய மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவற்றை தவறவிடும் ஒவ்வொரு தருணங்களிலும் பூமியின் ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும். அன்றாடம் நிகழ்த்தும் சிறு சிறு செயல்களின் மூலம் நமது சுற்றுப்புறத்தைக் காக்கும் கடமை நம் அனைவருக்கும் உண்டு.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இயற்கையைப் பேணிக்காப்பதோடு கற்பித்தல்- கற்றல் இந்த இரண்டு முறைகளிலும் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டால் தான் முழுமை பெற முடியும். வருங்காலத் தலைமுறையினர் ஆற்றலோடும், ஆளுமையோடும், உயர்வோடும், உரிமையோடும், சிறப்பாக வாழ வேண்டுமாயின் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் பற்றிய அறிவு அவசியம். இதனை நடைமுறைப்படுத்தும் கல்வி மிக மிக அவசியம். வருங்காலத் தலைமுறைக்கு கல்வியின் வழிச் சுற்றுச் சூழலை போற்றிப் பேணுவோம்.

**உசாத்துணை நூல்கள்**

1.Engel, J. R. & J. G. Engel (1993) Ethics of Environment & Development Belhaven Press, London
2.Sessions, G. (1995) Deep Ecology for the 21st Century, Shambhala, London
3.Milbrath L. W. (1984) Environmentalists: Vanguard for a New Society State University of New York Press.
4. Kelly, P. J. (1990). Utilitarianism and Distributive Justice: Jeremy Bentham and the Civil Law. Oxford.
5. Stevenson> R. B. (2007). "Schooling and environmental education: Contradictions in purpose and practice". Environmental Education Research. 13 (2).
6.Low, N. 1999 Global Ethics and Environment Routledge.
7. William Crono, ed. (1995) Uncommon Ground: Rethinking the Human Place in Nature> New York: W. W. Norton & Co.
8.Tester, Keith (1991) cited in Taylor, Angus. Animals and Ethics. Broadview Press,